## ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ அரங்கு எண் - 390




தலைநகரின் மாபெரும் அறிவுத் திருவிழாவான சென்னை புத்தகக் காட்சி, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் இன்று (27.12.2024) தொடங்குகிறது. தி.மு.கழக இளைஞர் அணியின் சார்பில் தொடங்கப்பட்டுள்ள, ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’, இரண்டாவது ஆண்டாக இம்முறையும் சென்னை புத்தகக் காட்சியில் அரங்கம் அமைத்துள்ளது. முத்தமிழறிஞர் பதிப்பகத்திற்கு முதன்மை நுழைவாயிலில் அரங்கு எண்: 390 ஒதுக்கப்பட்டுள்ளது.

திராவிட இயக்கத்தின் நூற்றாண்டுப் புரட்சியை விவரிக்கும் ‘திராவிடத்தால் வாழ்கிறோம்’ 3 பாகங்கள், மூன்றரை ஆண்டுக்கால ஆட்சியின் முத்தான சாதனைகளை விவரிக்கும் ‘திராவிட மாடல் அரசு’ 2 பாகங்கள், திராவிட இயக்கப் பெண் வீராங்கனைகளின் வரலாற்று ஆவணமாக எழுதப்பட்டுள்ள ‘திராவிடப் போராளிகள்’ 2 பாகங்கள், காலத்தால் அழியாத கலைஞரின் கட்டமைப்புகளை உச்சிமுகரும் ‘இடம் - பொருள் - கலைஞர்’ 2 பாகங்கள், திரைக்களத்தில் திராவிட இயக்கம் செய்த கலகங்களை சுவைபட விவரிக்கும் ‘திராவிட சினிமா’ 2 பாகங்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் வியக்கவைக்கும் பண்புகளைப் பலரும் வியந்து சொல்லும் ‘கலைஞரும் நானும்’ 2 பாகங்கள், இரத்தம் சிந்தி கழகம் வளர்த்த களப்பணியாளர்களின் உழைப்பை எடுத்துச் சொல்லும் ‘உடன் பிறப்பே’ 2 பாகங்கள், ‘டாக்டர் கலைஞர்’, ‘கலைஞர் இயக்கவியல்’, ‘தி.மு.க. இளைஞர் அணி அத்தியாயம்-1’ என மொத்தம் 18 நூல்கள் முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

திராவிட இயக்கத்தின் கருத்தியல் களஞ்சியமாகத் திகழும் இந்நூல்களை வாங்கிப் பயன்பெறுங்கள்! மற்றவர்களையும் பயன்பெறச் செய்யுங்கள்! நூல்களை வாங்க 90033-24472 என்ற எண்ணிலும், muthamilarignar@gmail.com என்ற இ-மெயில் முகவரியிலும் தொடர்புகொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்




### ‘புறநானூற்றுத் தாய் கவிதை!’



ஜி.வெங்கடேஸ்வரன்

2008-ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு விழா கவிதை ஒப்பித்தல் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றேன். தலைவர் கலைஞரின் ‘புறநானூற்றுத் தாய்’ எனும் கவிதையை ஏற்ற இறக்கங்களோடு ஒப்பித்து முடித்தேன். மாவட்ட அளவில் இரண்டாம் பரிசு எனக்குக் கிடைத்தது. அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்களின் கரங்களில் பரிசு பெற்ற போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**- மருத்துவர் ஜி. வெங்கடேஸ்வரன், புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘தமிழ்நாட்டில் தமிழில் பாடுங்கள்’!

1941-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ‘தமிழிசை மாநாடு’ நடைபெற்றது. இந்த மாநாட்டின் நோக்கமே, இசை நிகழ்ச்சிகளில் தமிழ்ப் பாடல்களை எப்படிப் பிரபலப்படுத்துவது என்பதாக இருந்தது. அதற்காகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தமிழ்ப் பாடல்களைப் புனைவோருக்கு ரொக்கப்பரிசுகள் அறிவிக்கப்பட்டன. பெரியார், அண்ணா, பி.டி.ராஜன் போன்றோர் ‘தமிழ்நாட்டில் தமிழில் பாடுங்கள்’ எனப் பல இடங்களில் வலியுறுத்திப் பேசினர்.

## சீரணி ⟹ இளைஞர் அணி 42

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

# இளைஞர் அணியும் மகளிரும்!

ஓவியம் : ரவி பேலட்




இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியில் இளம்பெண்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், 1970-களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ‘இளைஞர் அணி’ என்ற அரசுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது அதில் மகளிருக்கும் இடம் இருந்தது.

அவர்களது சேவைப் பணிகள் குறித்து, 1973, டிசம்பர் 16 தேதியிட்ட **‘தமிழரசு’** இதழில் **‘இளைஞர் அணி மகளிரின் இணையற்ற தொண்டு’** என்ற தலைப்பிட்ட கட்டுரை நமக்கு விளக்குகிறது. இந்தக் கட்டுரையை எழுதியவர் மறைந்த பிரபல எழுத்தாளர் பா.செயப்பிரகாசம். அதிலிருந்து சில பகுதிகள்:

“தஞ்சை மாவட்டத்தில் அரசு மருத்துவ மனையில் இளைஞர் அணியினைச் சார்ந்த மகளிர் மிகச் சிறப்பான முறையில் சமூகத் தொண்டினைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எழுத்து வேலை கொடுக்கப்பட வில்லை. சமூகத் தொண்டு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயல்படுகிறார்கள்.

தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவமனையில் இளைஞர் அணியினைச் சார்ந்த ஐந்து மகளிர் பணிபுரிந்து வருகிறார்கள். மருத்துவமனையின் நூலகத்தில் ஒருவர் பணி செய்து வருகிறார். நூலகத்திற்கு வந்து படிக்கக்கூடிய நோயாளிகளுக்கு உதவி செய்வதுடன், நேரடியாக மற்ற நோயாளிகளுக்குப் புத்தகங்கள் எடுத்துச் சென்று விநியோகித்து, அவைகளைத் திரும்பப் பெறும் பொறுப்பையும் ஏற்றுச் செயல்பட்டு வருகிறார். மருத்துவமனை நோயாளிகளைக் கேட்டபோது, இத்தொண்டு தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக, அறிவுப் பெருக்கத்திற்கு வகை செய்வதாகத் தெரிவித்தார்கள்” என்று அந்தக் கட்டுரை சொல்கிறது.

**பேரறிஞர் அண்ணாவின் சீரணியும், முத்தமிழறிஞர் கலைஞரின் இளைஞர் திட்டமும் மக்கள் மேம்பாட்டிலும், மாநில முன்னேற்றத்திலும் பங்காற்றி சத்தமில்லாமல் சாதனைகளைப் படைத்தன.**

நூலகம் போலவே, சமைய லறை, மனநோய்ப் பிரிவு, குழந்தைகள் மருத்துவப் பிரிவு, எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவு ஆகிய வற்றிலும் தலா ஒருவர் பணியாற்றினர்.

இவ்வாறு மகளிர் இளைஞர் அணியினர் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பொது நலப் பணி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு மனநிறைவோடு பணிபுரிந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் மூன்று மாதங்கள் பணிபுரிந்த பின்னர் வேறு பிரிவிற்கு மாற்றப்பட்டார்கள். இவ்விதம் வேலை கற்றுக்கொள்வதோடு, பல தரப்பட்ட நோயாளிகளுக்கும் தொண்டு செய்வதற்குரிய வாய்ப்பும் கிடைத்தது.

1973-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குப் பிறகு, ‘தமிழரசு’ அல்லது வேறு எந்த இதழிலும் ‘இளைஞர் அணி’ திட்டம் குறித்து தகவல் ஏதும் தென்படவில்லை. அநேகமாக, இந்தத் திட்டம் 1973-ஆம் ஆண்டுடன் நிறைவுக்கு வந்துவிட்டது என்று கருத இடமுண்டு. இப்படியாக, பேரறிஞர் அண்ணாவின் சீரணியும், முத்தமிழறிஞர் கலைஞரின் இளைஞர் திட்டமும் மக்கள் மேம்பாட்டிலும், மாநில முன்னேற்றத்திலும் பங்காற்றி சத்தமில்லாமல் சாதனைகளைப் படைத்தன.

அந்தச் சாதனைகளை விடப் பன்மடங்கு சாதனைகளைச் செய்ய நமது கழகம் மேற்கொண்ட தொடர் ஓட்டம்தான் இளைஞர் அணி. நமது இன்றைய தலைவர், அன்றைய தளபதி தலைமையிலான இளைஞர் அணி செய்த முக்கியமான சாதனைகளை, வரும் வாரத்தில் பார்ப்போம்..!

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி 42

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”**

# பெரியார் மண்: உருவாக்கியவர் அண்ணா! வளர்த்தவர் கலைஞர்!



***பெரியாரை தி.மு.க. விமர்சித்தது பற்றியும், தி.மு.க.வை பெரியார் விமர்சித்தது பற்றியும் பழைய பேப்பர் கட்டிங்குகளைத் தூக்கிக் கொண்டு வருகிறார்களே, பா.ஜ.க.வினரும், தமிழ்த் தேசிய லேகியம் விற்பனையாளர்களும்?***

பெரியாரிடமிருந்து முரண்பட்டுப் பிரிந்துதான் அண்ணா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார் என்பது வரலாறு. அதில் மறைப்பதற்கு எதுவுமில்லை. எதில் முரண்பட்டார் என்பதும், தெளிவாக உள்ளது. எதில் உடன்பட்டு நின்றார் என்பதையும் தி.மு.க தொடங்கப்பட்ட பின், ‘ராபின்சன் பூங்கா’வில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே அண்ணா தெளிவாக விளக்கியிருக்கிறார்.

‘கொள்கையும் ஒன்று, கோட்பாடும் ஒன்று. இலக்கும் ஒன்று. அதனை அடைகின்ற வழியில் மட்டுமே மாறுபடுகிறோம்’ என்பதையும் தெரிவித்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது, திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக அல்ல என்று அறிவித்த அண்ணா, தி.க.விலிருந்து ஒட்டு மாஞ்செடியாக தி.மு.க. உருவாகியிருக்கிறது என்றார். அரசியல் களத்தில் தி.க.வும் தி.மு.க.வும் 18 ஆண்டுகள் எதிரெதிராக இருந்ததும், கடும் விமர்சனங்களை முன்வைத்ததும், இரு கட்சிகளின் சார்பிலான ஏடுகளிலும் பதிவாகியுள்ளன. அவற்றைத் தூக்கிக்கொண்டுதான் ஏதோ புதியதாகக் கண்டுபிடித்ததுபோல பா.ஜ.க.வினரும் அவர்களின் மறைமுகக் கூட்டாளிகளான தமிழ்த் தேசிய லேகிய விற்பனையாளர்களும் கம்பு சுற்றுகிறார்கள்.

இந்த விமர்சனங்கள், கண்டனக் கணைகள் இவற்றைக் கடந்துதான் 1967-இல் தி.மு.க. மகத்தான வெற்றிபெற்றவுடன் அண்ணாவும் அவர் தம்பிகளான நாவலர், கலைஞர், அன்பில் ஆகியோரும், திருச்சியில் பெரியாரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்ற பிறகே ஆட்சி அமைத்தனர், என்பது வரலாறு.


பெரியார் முன்னெடுத்த சுயமரியாதைத் திருமண முறைக்கு, முன்தேதியிட்டு சட்ட அங்கீகாரம் அளித்து, ‘இது பெரியாருக்கு காணிக்கை’ என்றவர் முதலமைச்சர் அண்ணா. “புத்தனும் தர முடியாத பகுத்தறிவு ஆட்சியை வழங்கியிருக்கிறார் அண்ணா” என்று பாராட்டியவர் பெரியார். அதுபோலவே, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை நிறைவேற்றிய கலைஞரையும் மனமுவந்து பாராட்டினார் பெரியார். அதுமட்டுமல்ல, 1971-ஆம் ஆண்டு தேர்தலின்போது, பெரியார் நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தைக் காரணமாக்கி, தி.மு.க.வுக்கு எதிரான கடுமையான பிரச்சாரத்தை ஆரியக்கூட்டம் முன்னெடுத்தபோதும், அந்தத் தேர்தலில் 184 இடங்களில் தி.மு.க. மகத்தான வெற்றி பெற்றது. அப்போது பெரியார், ‘எனக்குப் பழி நீங்கியது. உங்களுக்கு உலகப் புகழ் கிடைத்தது’ என்று கலைஞரைப் பாராட்டினார்.

தமிழ்நாட்டுக்கு ‘பெரியார் மண்’ என்ற அடையாளத்தை உருவாக்கியவர்கள், அண்ணாவும் கலைஞரும். அதனைப் பொறுக்க முடியாத கூட்டம்தான், பழைய பேப்பர் கடையில் குப்பைகளைக் கிளறி, தன் பசிக்கான தீனியைத் தேடுகிறது.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 702

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131